உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

I. அன்னிய அரசாட்சியின் முடிவு நம் முடியை நாம் ஏற்பதே

II. நமது மதத்தில் அதிக நியமங்கள் எதனால்?

==================

ப்ரசுரம் 8

புரட்டாசி-மீ 10உ, வெள்ளிக்கிழமை

26-9-1947

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,
(Regd.)
கும்பகோணம்

(விலை *அணா ஒன்று*)

I. அன்னிய அரசாட்சியின் முடிவு நம் முடியை நாம் ஏற்பதே

---------o---------

அன்னிய அரசாங்கம் தலை மறைந்து கொண்டிருக்கிறது. அன்னிய அரசாங்கப் பட்டங்களை நம்மவர்கள் துறந்துக்கொண்டிருக்கிறார்கள். அன்னிய பாஷையின் மதிப்பையும் இறக்கிக்கொண்டிருக்கிறார்கள். அன்னிய ஆட்சிகாலத்தில், அன்னிய மோகத்தால், நம்மைப்பிடித்த பேய்கள் எல்லாவற்றிலும் தலையை மிதித்துக் கொண்டிருக்கும் மிகவும் முரடான பேய், அன்னிய அனுஷ்டான பேயே. பட்டங்களும் பாஷையும் போவதால் மாத்திரம் உண்மையில் அன்னியப்பேய் அகன்றுவிடவில்லை. அன்னிய மோகத்தை நாம் பாராட்டிக்கொண்டிருப்பது அன்னிய அனுஷ்டானங்களாலேயே. அவைகளில் ஒன்றை இங்கு ஆலோசிப்போம்.

நிஜாம் ராஜ்யத்தில் முகம்மதியர் ஆக்ஷியில், அகப்பட்டுக்கொண்ட நம்மவர்கள் நம் நாட்டுத்தலையணியைவிட்டு, குஞ்சம்கட்டிய துருக்கித் தொப்பியை அணிந்து, அவன் நாகரிகத்தை வேஷம் கட்டி ஆடுகிறார்கள். நிஜாம் ஹிந்து ப்ரஜை அன்னிய நாகரிகத்தின்தொப்பிபோட்டு திருப்தி செய்துவைப்பதோடு நிற்கிறான். வெள்ளையர் ப்ரஜைகளாயிருந்த நாமோ தொப்பிக்குக்கீழ் உள்ள நம் தேகத்தில் உள்ள ஒரு அம்சத்தையே அன்னிய நாகரிகத்திற்குப் பறி கொடுத்துவிட்டோம். அன்னிய நாகரிகத்தை தலையார வாழ்த்துகிறோம்.

சிகையை பறிகொடுத்துவிட்டோம். அன்னிய நாகரிகப்பேய் நம் தேகத்திலேயே ஒரு பாகமாய்விட்டது. இந்தப்பேயை விரட்டினாலொழிய அன்னிய ஆக்ஷியின் அடிமைத்தனம் உண்மையாய்ப் போனதாக ஆகாது. இன்னமுமா "கிறாப்" என்று தீரமாக ஆலோசியுங்கள். நீங்களே ஒருமுடிவுக்கு வாருங்கள். பாரதமாதா உண்மை ஸ்வதந்திரத்தை அடையட்டும். அவள் உங்கள் மனதில் புகுந்து ஸ்வதர்மம் என்னும் உண்மை ஸ்வதந்திரத்தைப் புகட்டி கடைசிப்பேய் விரட்டப்படட்டும்.

இனி எந்த ஹிந்து மதஸ்தனும் தன்மதிப்பையும் தன்தர்மத்தையும் விட்டு பிறனைப்பார்த்து காபி அடிக்கும் வீண் துர்பாக்கியத்தை அடையவேண்டாம்.

ஜேய் ஹிந்து

சிகையை ஏன் எடுக்கக்கூடாது?

1. முடிந்த சிகையுடன் செய்யவேண்டிய சுபகர்மானுஷ்டானங்களும், அவிழ்ந்த சிகையுடன் செய்யவேண்டிய அசுபகர்மானுஷ்டானங்களும் வீணாகாமலிருப்பதற்காக.

2. இறந்த உறவினர்களுடைய சாவு தீட்டுகளையெல்லாம் ஒருங்கே சேமித்து வைத்துக்கொள்ளாமல் இருப்பதற்காக விதி முறைப்படி க்ஷவரமும் தர்ப்பணமும் செய்தாலொழிய தீட்டு அகலாது.

3. வேதமந்த்ர பூர்வம் தெய்வ ஸாக்ஷியாகச் சௌளகர்மாவில் வைக்கப்பட்ட சிகையைத் திரும்பவும் வேத மந்த்ரபூர்வமாக ஸன்யாஸ ஸமயத்திலேயே எடுக்கவேண்டியிருக்க, இடையே இஷ்டப்படி எடுத்துவிடுவதால் வேத துரோகமும், தெய்வ துரோகமும் ஏற்படாமலிருக்க.

4. ஒரு மனிதன் ஸ்னானம் செய்தவுடன் அவன் மேல்வஸ்திரத்தைப் பிழிந்த ஜலமும், சிகையின் நுனியின் மூலமாய் கீழே விட்ட ஜலமுமே அவனுடைய வம்சத்தில் பிறந்த முன்னோர்களில் யாரேனும் அதிக பாதகங்கள் செய்து நரகத்தில் இருந்தால் அவர்களைப்போய்ச்சேரும் தர்ப்பணஜலமாகிறது. ஆதலால் அவர்களுக்குக் கொஞ்சமேனும் ஏற்படும் ஆறுதலையும் கெடுக்காமலிருப்பதற்காக.

5. கடைசியாக மேனாட்டு நாகரீகத்தைத் தலையார வாழ்த்தாமலிருப்பதற்காக.

II. நமது மதத்தில் அதிக நியமங்கள் எதனால்?

வினா:- ஈசனுடைய அரசாங்கத்தில் அதிகாரிகள் யார்?

விடை:- முப்பத்து முக்கோடி தேவர்களும் பித்ருக்களும்.

வினா:- அவர்கள் இருப்பிடம் யாது?

விடை:- முறையே வடக்கில் உள்ள தேவலோகமும், தெற்கு திக்கில் உள்ள பித்ரு லோகமும், என்று மறைகள் கூறுகின்றன.

வினா:- இவ்வீசனது அரசாங்கத்திற்கு நாம் செலுத்தும் வரி யாது?

விடை:- தேவர் கடனும், பித்ரு கடனும்.

வினா:- நம்மையெல்லாம் காப்பதற்காக அவ்வதிகாரிகளுக்கு எதை ஜீவனமாக ஏற்படுத்தி யிருக்கிறார்?

விடை:- தேவ யக்ஞங்களும், பித்ரு யக்ஞங்களுமே. திருவள்ளுவ நாயனாரும் திருக்குறளில்

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றால்
கைம்புலத்தா றோம்ப றலை"

என்று கிருஹஸ்தாச்ரமத்தைக் கூறுமிடத்துச் சொல்லியிருக்கிறார்.

வினா:- தென்புலத்தார் என்றால் யார்?

விடை:- தெற்கு திக்கில் உள்ள லோகத்தில் இருக்கும் பித்ருக்கள். ஆதலால்தான் வேதியர்கள் பித்ரு சடங்குகளைச்செய்யும் பொழுது தென்தோளான வலது தோளில் பூணூலைப் போட்டுக் கொள்வதையும், ஸந்த்யாவந்தனம், யாகம் முதலிய தெய்வச் சடங்குகளைச் செய்யும் பொழுது அதனை வடதோளாகிய இடது தோளில் போட்டுக்கொள்வதையும் பார்க்கிறோம்.

வினா:- லோக பொது க்ஷேமத்தின் பொருட்டு ஒவ்வொரு குலத்தோரும் செய்யவேண்டிய கடமைகளில் வேதியர்கள் செய்ய வேண்டிய கடமை எது?

விடை:- வேதமோதி, வெகு நியமத்துடன் மந்த்ர சக்தியை ரக்ஷித்து, உலகத்தில் உள்ள எல்லா ப்ராணிகளுக்கும் ப்ரதிநிதியாக ஈச்வரனால் அதிகாரம் கொடுக்கப்பட்ட இந்திரன், வருணன், வாயு, அக்னி முதலிய தேவர்களுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்தி, உலகத்திற்கு ஈசனது அருளைப் பெறுவிப்பதே. வருணங்களிலும் மற்ற அனுலோம, ப்ரதிலோம குலங்களில் பிறந்த மக்களுக்குக் கைத்தொழில்கள், வியாபாரம், விவசாயம், அரசு, முதலிய உலக வியல்பான காரியங்களில் விசேஷமாக ஈடுபட்டுச் செய்யுமாறு அறநூல் குறிப்பிடுவது போல், மந்த்ர சக்தியை முக்கிய காரியமாக் கொண்டு, ஈசனது அரசாங்கத்திற்கு வரிக்கொப்பான தெய்வ கர்மங்கள், பித்ரு கர்மங்கள் என்ற கடமைகளைச் செலுத்தி, பிரபஞ்ச முழுவதிற்கும் தொண்டு புரிவதையே வேதியர்களின் விசேஷமான கடமையாக அறநூல் குறிப்பிடுகிறது.

வினா:- இக்கடமைகள் உலகினில் சரிவர நடை பெறாவிடில் என்ன ஏற்படும்?

விடை:- அரசாங்கத்திற்கு வரி கொடாப் பிரஜைகளின் கதியே உலகத்திற்கு ஏற்படும். ஆகையால் தான் இக்காலத்தில் அக்ரம யுத்தங்களும், வியாதிகளும், நாசங்களும், பஞ்சங்களும் இன்னும் மனித சக்திக்கு அடங்காத அநேக விதமான கஷ்ட நஷ்டங்களும் மலிகின்றன.

வினா:- வேதியர்கள் செய்யவேண்டிய தெய்வச் சடங்குகள் யாருடைய க்ஷேமத்திற்காக ?

விடை:- உலகத்திலுள்ள ஈ, எறும்பு, எல்லாச் சமயங்களையும் சேர்ந்த மாந்தர்கள் உள்பட எல்லாப் பிராணிகளுடைய க்ஷேமத்திற்காகத்தான்.

வினா:- திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பதிகத்திலிருந்து கூறப்பட்ட பரித காக்கையர், பாயுடுக்கையர் என்னும் பாசுரத்தில் உள்ள மறை வழக்கம் என்னும் சொல்லுக்குப் பொருள் யாது ?

விடை:- வேதத்தின் கர்ம காண்டத்தில் ஆசாரம், அனுஷ்டானம் என்ற இரு வகைப்பட்ட தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஆசாரமாவது தனது உடலுக்கும் மனதுக்கும் தெய்வீகமான சுத்தியைத் தரும் நடத்தை. அனுஷ்டானமாவது வேத விதிப்படி தேவர்கள், பித்ருக்கள், மாதா, பிதா, ஆசார்யன், பெரியோர், அதிதிகள் இவர்களுக்கு நடத்தப்படவேண்டிய சடங்குகள். தமிழ் அற நூல்கள் ஆசாரத்தை ஒழுக்கம் என்றும், அனுஷ்டானத்தை வழக்கம் என்றும் சொல்லும். ஆதலால் மறை வழக்கம் என்பதே வைதீக அனுஷ்டானம் என்று பொருள்படும்.

வினா:- ஒருவன் வேதத்தின் ஆணையான தெய்வ பித்ரு கர்மங்களைச் செய்யாது, வேண்டுமென்றே மீறி, ஈசனிடத்தில் மாத்திரம் பக்தி செய்கிறேன், என்று சொன்னால் அவன் கதியாது ?

விடை:- தன் கட்டளையைச் செய்யாது மீறி நடந்து தன்னை மாத்திரம் ஸ்துதி செய்யும் தன் வேலைக்காரனை ஓர் அரசன் எப்படி நடத்துவானோ அதே கதிதான் இவனுக்கும்.

வினா:- வேதத்தால் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யாது, ஈசனிடம் ஞானம், பக்திகளை மாத்திரம் யாராவது செய்யலாமா ?

விடை:- செய்யலாம்.

வினா:- எவன் செய்யலாம் ?

விடை:- துறவி.

வினா:- அவன் மாத்திரம் எப்படி இக் கடமைகளை விட்டு விடலாம்?

விடை:- நம் நாட்டுப் பிரஜைகளில், வீடு வேண்டும் என்பவன் வீட்டு வரி செலுத்தவேண்டும். நிலம் வேண்டும் என்பவன் நில வரி செலுத்தவேண்டும். வட்டி, லாபம் வேண்டும் என்பவன் வருமான வரி செலுத்தவேண்டும். வீடு, நிலம், வட்டி, லாபம் ஒன்றும் வேண்டாம் என்று ராஜீனாமா கொடுத்து விட்டவன் ஒருவரியும் கொடாமலேயே அதிகாரிகளிடம் போய், நிர்பயமாய் உட்காரலாம். அது போலவே இல் வாழ்வான தனக்கும் தன்னை அண்டினவர்களுக்கும் நிழல் வேண்டும், பொருள் வேண்டும், ஸூர்யனது வெப்பம் வேண்டும், அக்னியினது உஷ்ணம் வேண்டும், வருணனது நீர் வேண்டும், இலை வேண்டும், காய்கறி வேண்டும் என்னும் அபேக்ஷைகள் இருக்கும் வரையில் தேவர் கடனைச் செலுத்தியே ஆகவேண்டும். இவ்வுலகிலுள்ள மாந்தர்களால் ஒரு இலையையாவது, தான்யத்தையாவது எவ்வளவு ரஸாயன விஞ்ஞானிகள் சேர்ந்தாலும் சிருஷ்டித்து விடமுடியாது. ஒரு முனிசிபாலிடியில் இருப்பதற்காக முனிசிபல் வரியும், ஒரு ஜில்லாவில் வசிப்பதற்காக ஜில்லா போர்டு வரியும், ஒரு நாட்டில் வசிப்பதற்காக அரசாங்க வரியும் செலுத்துவது போலவே, இப் பிரபஞ்சத்தில் நாம் வசிப்பதற்காக தேவர் கடமையையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். இதுவே ஹிந்த மதம் என்னும் வேத நெறியின் சிறப்பான கொள்கை. பரமஹம்ஸ ஸன்யாஸியோ, தனக்கு வீடும் வேண்டாம்; குழந்தைகளும் வேண்டாம்; பந்துக்களும் வேண்டாம்; உணவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தான் சமையல் செய்து கொள்வதில்லை; வஸ்திரம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தான் வாங்கிக் கொள்வதில்லை; உடல் இருந்தாலும் விழுந்தாலும் தான் கவலைப்படுவதில்லை; ஓர் இலையையும் கிள்ளுவதில்லை; என்று எல்லாவற்றையும் துறந்து விட்டபடியால், அவன் தேவர்களுக்கோ, பித்ருகளுக்கோ செலுத்தவேண்டிய கடமை ஒன்றுமே இல்லை. ஈசனிடம் ஒன்றுபடுவதற்கு நிஷ்டை செய்வதைத் தவிர வேறு கடமை இல்லை. அவன் செய்யும் உலக ஸேவையும் அதுவேதான். அல்லும் பகலும் இறைவனையே நாடி, வேறு ஆசையையும் மறந்து, ஈசன் அருளைப் பெற்றவன் ஒருவன் இவ்வுலகில் இருந்தானேயானால் அவனது தர்சனத்தினால் உலகிலுள்ள மாந்தர் அடையும் நன்மையே பொருள்முதலிய எல்லாவற்றையும் விட மேலானது. ஆதலால் தான் பரமஹம்ஸ ஸன்யாஸி தேவயக்ஞத்துக்கும், பித்ருயக்ஞத்துக்கும் அவச்யமான யக்ஞோபவீதம், ப்ராசீனாவீதம் என்னும் பூணூலையும், சிகை என்னும் குடுமியையும், பஞ்சகச்சம் என்னும் ஆடை உடுக்கும் விதியையும் துறந்து, தன் ஆசையும் அதற்குரிய கடமையும் முடிந்தது என்ற நிலையை அடைகிறான்.

விக்ஷேமான பித்ரு கர்மங்களில் சிகையிலும், கச்சத்திலும், வேதவிதிப்படி தெய்வ கர்மத்தைக்காட்டிலும் சில மாறுபாடுகள் உள்ளன.

வினா:- கிருஹஸ்தாச்ரமி ஏன் சிகை, கச்சம், உபவீதம் இவைகளைத் தரிக்கவேண்டும் ?

விடை:- வேத விதிப்படி இவைகள் மூன்றும் தெய்வ பித்ரு கர்மாக்களுக்குச் சாதனமாதலால்தான்.

வினா:- தெய்வ பித்ருகர்மங்களை அவன் ஏன் செய்யவேண்டும் ?

விடை:- நீர், வெப்பம், நிழல், உணவு, குழந்தை, பெண்டிர் முதலிய வேண்டுமென்ற ஆசையிருப்பதால்.

வினா:- இவைகளுக்காக தேவர்கடன் செய்வானேன் ?

விடை:- இப்பொருள்களில் ஒன்றையேனும் மனிதன் செய்ய முடியாது. மனித சக்திக்கும் எட்டாத தேவசக்தியினால் ச்ருஷ்டிக்கப்பட்ட பொருள்களை நாம் அனுபவித்துக்கொண்டு ப்ரபஞ்ச அரசாங்கத்தின் வேதச்சட்டப்படி அவைகளுக்குக் கைம்மாறான கடமைகளை நாம் செலுத்தாவிடின் நாம் திருடர்கள் ஆவோம். இதையே ஸ்ரீ க்ருஷ்ணபகவான் பகவத்கீதையில் 3-ம் அத்யாயம், 12-வது ச்லோகத்தில்,

"யக்ஞங்களால் ஆராதிக்கப்பட்ட தேவர்கள் திருப்தி அடைந்து, காற்று, வெப்பம், நீர், செடி, கொடி முதலியவற்றின் மூலமாக மாந்தர்களுக்கு இஷ்டமான போக சுகங்களைக் கொடுக்கின்றார்கள். அப்படி அவர்களால் தரப்பட்ட வஸ்துக்களில் அவர்களுக்கு உரிமையானவைகளைச் செலுத்தாமல் தான் மட்டும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறவன் திருடனாகவே ஆகிறான்," என்று கூறியிருக்கிறார். மற்றும் பகவான் ஷை அத்தியாயம் 10,11-வது ச்லோகங்களில்:- ஆதியில் சிருஷ்டிகாலத்தில் பகவான் யக்ஞத்தோடுகூடவே உலக மாந்தர்களை சிருஷ்டித்தார். பிறகு மாந்தர்களை நோக்கி இவ்விதம் கூறலானார்:-

"இந்த யக்ஞத்தைக்கொண்டு நீங்கள் அபிவிருத்தியை அடையுங்கள். உங்கள் அபிவிருத்திக்காக நீங்கள் வேண்டும் பொருள்களையெல்லாம் உங்களுக்கு ஓர் காமதேனுவாய் நின்று இது கொடுக்கட்டும். இந்த யக்ஞத்தைக்கொண்டு தேவர்களுக்கு க்ஷேமகரமான காரியங்களைச் செய்துவைப்பீர்களாக. அவர்கள் (நீர், வெப்பம் முதலியவற்றால்) உங்களுக்கு க்ஷேமகரமான காரியங்களைச் செய்துவைப்பார்களாக. (இவ்விதம் ஓர் நல்ல அரசனுடைய அதிகாரிகளும், பிரஜைகளும் போலப் பரஸ்பரம் க்ஷேமகரமான காரியங்களைச் செய்துகொண்டு கிரமமாக ஈசனை அணுகுதல் என்பதீறாக உள்ள) பெரும் பேற்றை அடையுங்கள்" என்று கூறியிருக்கிறார்.

தெய்வ கர்மங்களுக்கு வேதவிதிப்படி அவச்யமான மந்த்ர சக்தியும் ஆகார சுத்தியும் கொஞ்சமாவது நிலைத்திருப்பதற்காகவே, உடலில் காம உணர்ச்சி உதிப்பதற்கு முற்காலமாகிய எட்டு வயதிலேயே கிரமமாக வர்ணாச்ரம தர்மங்கள் ஆரம்பிக்கப்பட்டு விதிக்கப்பட்டிருக்கின்றன.

பித்ரு கர்மங்களுக்கு ஆதாரமான வம்ச சுத்திக்காகவே கன்னிப்பருவத்திலேயே மணத்தல், விதவைகள் விசேஷ நியமத்தோடு இருத்தல் முதலியன சிறப்பாக நமது வேதநெறியில் விதிக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கஜானாவில் சட்ட முறைப்படி எதைச் செலுத்தினாலும், அது அரசனுக்கே உரித்தாவதுபோல், எத்தேவர்கட்கோ, எப்பித்ருகளுக்கோ, எப்பெரியோருக்கோ வேத நெறிப்படி அர்ப்பணம் செய்யினும் அது எல்லாம் வல்ல ஈசனுக்குத் திருப்பணியே.

வேதவிதிப்படி அந்தணர் நியமத்துடன் ஓதிய மந்த்ரத்தைக் கொண்டு வானவரைக்குறித்து முக்கியமாய் ஆவின்பால், நெய், முதலிய த்ரவியங்களை ஹோமம் செய்தலென்னும் யக்ஞத்தினால் உலக சாம்ராஜ்யம் செழிக்கும். "ஹரஹரமகாதேவ" என்ற அரசன் புகழ் ஒலிக்கும். ஆதலால் வேதநெறிப்படி ஒழுகும் அந்தணரையும் வேள்விக்காம் அவிநெய் பெய்யும் ஆனினத்தையும் குறித்தே ஸ்ரீ குமாரக்கடவுளின் அம்சமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கீழ்வருமாறு வாழ்த்துப்பதிகம் பாடியருளியிருகின்றார்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரசன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே."

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.